بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/02/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## கைபர் போர் பின்னணியில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்ட போது கைபர் போரில் அன்னாருடைய முன்மாதிரி எவ்வாறானதாக இருந்தது என்று கூறப்பட்டது. **கைபர் போருக்கு பிறகு பெருமானார் (ஸல்) அவர்களை கொலை செய்வதற்கு யூதர்கள் சார்பாக ஒரு சதித்திட்டம் தீட்டப்பட்டது;** விஷம் கலந்த ஆட்டிறைச்சி கொடுப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன் விவரம் என்னவென்றால், கைபர் வெற்றி கொள்ளப்பட்டபோது கைபர்வாசிகளுடன் உடன்படிக்கை செய்யப்பட்டது. யூதர்கள் மோசமாக தோல்வியடைந்ததற்குப் பிறகும் பெருமானார் (ஸல்) அவர்களின் கருணை மற்றும் பரிவிலிருந்து மீண்டும் ஒருமுறை அவர்கள் பயனடைந்தார்கள். அது என்னவென்றால், அன்னார் அவர்களை மன்னித்தது மட்டுமின்றி கைபரில் வசிப்பதற்கும் அனுமதி வழங்கினார்கள். ஆகவே மக்கள் நிம்மதியடைந்தபோது, யூத தலைவரான ஸலாம் பின் மிஷ்கம் என்பவரின் மனைவி ஸைனப் பின்த் ஹாரிஸ் என்பவள் பெருமானார் (ஸல்) அவர்களின் சமூகத்தில் பொறித்த ஆட்டிறைச்சியைக் கொண்டு வந்து, தங்களுக்காக அன்பளிப்பு கொண்டு வந்துள்ளேன் என்றாள். இந்த சதித் திட்டத்தில் அந்த பெண் தனியாளாக இருக்கவில்லை; மாறாக இன்னும் சில யூதர்களும் இருந்தார்கள் என்றும் கூறப்பட்டுகிறது. அன்னாருடைய கட்டளைக்கிணங்க அந்த அன்பளிப்பு அன்னாருக்கு முன்னால் வைக்கப்பட்டது. அங்கு சில ஸஹாபிகளும் இருந்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஃ (ரலி) அவர்களும் இருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த இறைச்சியில் முன்னஞ்சந்து பகுதியிலிருந்து ஒரு சிறிய துண்டை எடுத்து வாயில் வைத்தார்கள். மற்ற மக்களும் இறைச்சியை எடுத்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிடம், உங்கள் கைகளை தடுத்துக் கொள்ளுங்கள்; ஏனென்றால் இந்த முன்னஞ்சந்து இறைச்சி விஷம் தேய்க்கப்பட்டிருப்பதாக கூறுகிறது என்றார்கள். ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஃ (ரலி) அவர்கள் அன்னாரிடம், நான் உண்ட இறைச்சித் தூண்டில் எதையோ நான் உணர்ந்தேன். தங்களுடைய உணவு வீணாகி விடக்கூடாதே என்பதற்காக நான் அதை துப்பவில்லை. தாங்கள் வாயில் இட்டதைக் கண்டபோது எனக்கு என்னை விட தங்களைப் பற்றி அதிக கவலை ஏற்பட்டது. தாங்கள் அதை விழுங்காததை எண்ணி எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்கள் தம் இடத்தை விட்டு எழுந்திருக்கக்கூட இல்லை அவர்களின் உடல் நிறம் மாறத் துவங்கியது. பிறகு அவர்கள் எந்த அளவு நோய்வாய்ப்பட்டார்கள் என்றால் (பிறர் உதவியின்றி) அவர்களால் திரும்பிப் படுக்க கூட

இயலாமல் போனது. ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு பிறகு அவர்கள் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் பிஷ்ர் (ரலி) அவர்கள் தம் இடத்தை விட்டு எழுந்திருக்க முடியாமல் இருந்தபோதே அங்கேயே அவர்கள் மரணமடைந்தார்கள் என்றும் சில அறிவிப்புகளில் வருகிறது. இருவகையான அறிவிப்புகளும் உள்ளன.

பெருமானார் (ஸல்) அவர்கள் அப்பெண்ணை வரவழைத்து உன்னிடம் இந்த வேலையை செய்யச் சொன்னது யார் என்று கேட்டார்கள். அதற்கு அவள், தாங்கள் அரசராக இருந்தால் நாங்கள் தங்களிடமிருந்து இரட்சிப்பு அடைந்து விடுவோம். தாங்கள் நபியாக இருந்தால் தங்களுக்கு தகவல் கிடைத்துவிடும் என்று நான் கருதினேன் என்றாள். அன்னார் அந்தப் பெண்ணை மன்னித்து விட்டார்கள். மற்றோர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் பிஷ்ர் பின் பராஃ (ரலி) அவர்கள் மரணமடைந்த போது அந்தப் பெண் கொல்லப்பட்டாள் என்றும் வருகிறது. சஹீஹ் முஸ்லிமின் அறிவிப்பின் அடிப்படையில் அப்பெண் கொலை செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது.

ஸஹீஹ் புகாரியில் இவ்வாறு வருகிறது; ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த நோயில் இறந்தார்களோ அந்த நோயின்போது, ஆயிஷாவே! கைபரில் (யூதப் பெண்ணொருத்தியால் விஷம் கலந்து தரப்பட்ட) அந்த உணவை நான் உண்டதால் ஏற்பட்ட வேதனையை நான் தொடர்ந்து அனுபவித்து வருகிறேன். அந்த விஷத்தின் காரணத்தால் என் இரத்தக்குழாய் அறுந்து போவதை நான் உணர்கிறேன் என்று கூறினார்கள்.

**பெருமானார் (ஸல்) அவர்களின் மரணம் கைபர் போரில் உண்ணப்பட்ட விஷம் கலந்த இறைச்சியால்தான் ஏற்பட்டது என்று சில முஸ்லிம் விரிவுரையாளர்களும் ஹதீஸ் வல்லுனர்களும் கூறுகிறார்கள். ஆகவே அன்னாருடைய மரணத்தை ஷஹாதத் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்.** அன்னார் மாபெரும் ஷஹீதாக இருந்தார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக இந்த மெனக்கெடல் அவசியமில்லை! நபியுடைய அந்தஸ்தும் தகுதியும் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றால், அவர் ஷஹீதாகவும் இருக்கிறார்; சித்தீக் ஆகவும் இருக்கிறார். அன்னார் இறைவனுடைய உண்மையான நபியாக இருப்பார்கள் என்றால் இந்த விஷத்திலிருந்து தப்பித்து விடுவார்கள் என்றுதான் யூதர்கள் விஷம் கொடுத்தார்கள். அன்னார் தப்பித்ததன் காரணமாகவே, அன்னார் நிச்சயமாக இறைவனுடைய உண்மையான நபி ஆவார் என்று அவர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்களின் பார்வையில் இது ஓர் அற்புதமாக இருந்தது. ஆனால் சில அப்பாவி முஸ்லிம்கள் இந்த விஷத்தினால் அன்னாருடைய மரணம் நிகழ்ந்தது என்று கூறி அன்னாருடைய ஷஹாதத்தை நிரூபிப்பதற்கு முயற்சி செய்கின்றனர். **அந்த விஷத்தின் காரணமாக அன்னாருடைய மரணம் ஒருபோதும் - ஒருபோதும் நிகழவில்லை!** அன்னார் மரணத் தருவாயில் கூறியது துன்பத்தின் வெளிப்பாடாக இருந்தது. சில நேரங்களில் ஏதேனும் உடல் ரீதியான துன்பமோ, காயமோ அல்லது நோயோ எப்பொழுதாவது ஏதேனும் குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட காலநிலையில் வெளியே வந்து விடுகிறது என்பதை ஒவ்வொருவரும் அறிவார்.

**கைபர் போரில் ஹஸ்ரத் சஃபிய்யா(ரலி) அவர்களுடன் திருமணம் நிகழ்ந்த குறிப்பும் காணக் கிடைக்கிறது.** கைபர் போர்க் கைதிகள் ஒன்று கூட்டப்பட்டபோது ஹஸ்ரத் திஹ்யா (ரலி) அவர்கள் அன்னாரிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த கைதிகளுள் எனக்கு ஒரு பெண்ணை தாருங்கள் என்று கேட்டார்கள். (ஏதேனும்) ஒரு பெண்ணை எடுத்துக் கொள்ளுங்கள் என்று அன்னார் கூறினார்கள். ஆகவே அவர்கள் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களை எடுத்துக் கொண்டார்கள். அப்போது ஒருவர் அன்னாரிடம் வந்து,

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் அவருக்கு ஹுயய் பின் அக்தபுடைய மகளை கொடுத்து விட்டீர்கள். அப்பெண் பனூ குறைஸா மற்றும் பனூ நஸீருடைய இளவரசி ஆவாள்; தங்களைத் தவிர வேறு யாருக்கும் அவள் பொருத்தமானவள் கிடையாது என்று கூறினார். அவரை அழைத்து வாருங்கள் என்று அன்னார் கூறினார்கள். அன்னார் ஹஸ்ரத் திஹ்யா (ரலி) அவர்களிடம் இந்த கைதிகளுள் இவளைத் தவிர வேறு யாரையாவது நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களை விடுதலை செய்து விட்டார்கள்.

முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பலின் அறிவிப்பில் வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களை விடுதலை செய்யும்போது, நான் உன்னை விடுதலை செய்கிறேன். நீ விரும்பினால் என்னை திருமணம் செய்து கொள்ளலாம். இல்லை என்றால் உமது கோத்திரத்தை நோக்கி திரும்பிச் செல்லலாம். உள்ளம் விரும்பியபடி நடந்து கொள்ளலாம் என்று கூறினார்கள். ஆகவே, ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்கள் அன்னாருடன் திருமணம் புரிவதை விரும்பினார்கள்.

கைபருடைய அனைத்து விவகாரங்களையும் முடித்த பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் கைபரிலிருந்து புறப்பட்டார்கள். ஆறு மைல் தூரம் தாண்டிய பிறகு ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களுடனான திருமணத்தை முழுமைபடுத்தும் வகையில் அன்னார் அங்கு முகாமிட விரும்பினார்கள். ஆனால் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் அன்னார் பயணத்தை தொடர்ந்தார்கள். ஏறக்குறைய 12 மைல் தூரத்தை கடந்து முகாமிட்டார்கள். அங்கு ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களைத் திருமணம் செய்தார்கள்.

ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) கூறுகிறார்கள்: ‘பெருமானார் (ஸல்) அவர்கள் கைபருக்கு மிக அருகில் முகாமிட விரும்பினார்கள். என்னுடைய சமுதாயத்தினர் அன்னாருக்கு ஏதேனும் துன்பமிழைக்க முயற்சிக்கக் கூடாதே என்று எனக்கு அச்சம் ஏற்பட்டது. ஆகவே கைபரை விட்டு இன்னும் விலகிச் சென்று முகாமிட வேண்டும் என்று நான் விருப்பம் தெரிவித்தேன்.’

பெருமானார் (ஸல்) அவர்களின் மேலான நல்லொழுக்கங்களின் தாக்கத்தின் காரணமாகவே ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களுக்கு இவ்வுலகிலும் மறு உலகிலும் அன்னாரை விட அதிக நேசத்திற்குரியவராக யாரும் இருக்கவில்லை.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்சாரி (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கூடாரத்திற்கு வெளியே இரவு நேரத்தில் காவலுக்கு நின்ற நிகழ்வும், ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்சாரி (ரலி) அவர்களின் இந்த அப்பாவித்தனமான நேசத்தைக் கண்ட அன்னார் அவருக்காக துஆ செய்த நிகழ்வும் காணக் கிடைக்கிறது.

அடுத்த நாள் அன்னார் சார்பாக வலீமா விருந்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த வலீமா விருந்தும்கூட மிக எளிமையானதாகவும், சிறப்பானதாகவும் இருந்தது. மூன்று நாள்கள் தங்கிய பிறகு அங்கிருந்து புறப்பட்டார்கள். ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களின் விடுதலையே அவர்களின் மஹராக நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது.

ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களின் ஒரு கனவைப் பற்றிய குறிப்பும் இங்கு காணக் கிடைக்கிறது. ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ‘அன்னார் கைபருக்கு வருவதற்கு சில நாட்கள் முன்பு நான் ஒரு கனவு கண்டேன். யஸ்ரப் பகுதியில் இருந்து சந்திரன் வந்து என் மடியில் விழுந்து விட்டது.’

ஹஸ்ரத் சஃபிய்யா அவர்கள் ஹிஜ்ரீ 50 ஆம் ஆண்டில் வஃபாத் ஆனார்கள். ஜன்னத்துல் பகீயில் நல்லடக்கம் செய்யப்பட்டார்கள்.

**ஹஸ்ரத் சஃபிய்யா அவர்களின் திருமணத்தைக் குறித்தும் மேற்கத்திய வரலாற்றாசிரியர்கள் மிக மோசமான வகையில் ஆட்சேபனை செய்கிறார்கள்.** பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களின் அழகைப்பற்றி கேள்விப்பட்ட போது ஹஸ்ரத் திஹ்யா (ரலி) அவர்களிடமிருந்து அவர்களை திரும்ப பெற்றுக் கொண்டு அன்னாரே அவர்களைத் திருமணம் புரிந்து கொண்டார்கள் என்பன போன்ற ஆட்சேபனைகளை செய்திருக்கிறார்கள்.

*இது தொடர்பாக ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு மேற்கோளையும் ஹுஸூர் அவர்கள் எடுத்து வைத்தார்கள்.*

**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** 'அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், குடிமக்களுடன் நேசத்தை உருவாக்குவதற்காகவும் வெற்றி கொள்ளப்பட்ட நாட்டினுடைய அரசனின் மகளுடனோ அல்லது மனைவியுடனோ திருமணம் செய்யும் வழக்கம் அரேபியாவில் இருந்தது. அவ்வாறு நடக்கும்போது, அனைத்து குடிமக்களும் அரச குடும்பத்தினரும் அதனால் நிம்மதியடைந்தார்கள்.'

அன்னார் ஹஸ்ரத் சஃபிய்யா (ரலி) அவர்களுடன் திருமணம் செய்ய முடிவெடுத்தார்கள் என்றால் அதற்கான அடிப்படை காரணம் பிற மக்கள் கூறுவதே போன்று உலக நோக்கங்கள் கிடையாது! மாறாக அல்லாஹ்வுடைய கட்டளை மட்டுமே ஆகும். பெருமானார் (ஸல்) அவர்களின் ஒவ்வொரு அசைவும் இறைவிருப்பம் இன்றி நிகழ்ந்தது கிடையாது. இறைவனே இதைக் குறித்து கூறியிருக்கிறான்: "நீர் கூறுவீராக! எனது இறைவணக்கங்கள், எனது தியாகங்கள், எனது வாழ்வு, எனது மரணம் ஆகிய அனைத்தும் எல்லா உலகங்களின் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே உரியன." (திருக்குர்ஆன் 6:163)

எவர் அனைத்து வேலைகளையும் இறைவனுக்காகவே செய்வாரோ, எவருக்கு ஒவ்வொரு நொடிப்பொழுதும் அர்ஷில் இருக்கின்ற இறைவன் வழிகாட்டுகிறானோ அவர் இவ்வளவு பெரிய முடிவை தாமே ஏன் எடுக்கப் போகிறார்? ஆகவே அன்னார் செய்த அனைத்து திருமணங்களும் நிச்சயமாக இறை விருப்பத்திற்கிணங்கதான் இருந்தன. அதனுடைய விளைவுகள் முற்றிலும் அருளுக்குரியதாகவும் நுட்பமானதாகவும் இருந்தன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் ஆயினயே கமாலாத்தே இஸ்லாம் என்ற தம் நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்:** "பெருமானார் (ஸல்) அவர்களின் எந்தவொரு செயலும் எந்தவொரு சொல்லும் வஹீயின் கலப்படமின்றி இருக்கவில்லை என்றே அன்னாரைக் குறித்து ஸஹாபிகளின் நம்பிக்கை இருந்தது என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது. இதைப்பற்றி அன்னார் கூறும்போது, எந்த இறைவனின் கையில் என் உயிர் உள்ளதோ அவன் மீது ஆணையாக! என்னிடமிருந்து எது வெளிப்பட்டாலும் - அது சொல்லாக இருந்தாலும், செயலாக இருந்தாலும் அவை அனைத்தும் இறைவன் சார்பாகவே ஆகும் என்று கூறினார்கள். இதே ஹதீஸ் நூல்களில் சில விவகாரங்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் புரிதலில் ஏற்பட்டுள்ள தவறுகள் குறித்தும் குறிப்பிடப்பட்டுள்ளதே! அன்னாருடைய அனைத்து சொல்லும் செயலும் இறையறிவிப்பினால்தான் இருந்தது என்றால் பிறகு அந்த தவறுகள் ஏன் ஏற்பட்டன? என்று கேட்டால் அதற்கான காரணம், ........நாம் இவ்வாறான தவறுகளையும்கூட இறையறிவிப்பை விட்டு தனித்ததாக கருதுவதில்லை. ஏனென்றால் அது சாதாரண விஷயமாக இருக்கவில்லை!........ சில சமயம் இறைவன் சில நுட்பமான விஷயங்களுக்காக நபிமார்களின் புரிதலையும் சிந்தித்தலையும் தன் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்கிறான். அப்போது ஏதேனும் சொல்லோ செயலோ, மறதி அல்லது தவறு எனும் தோற்றத்தில் அவர்கள் மூலமாக வெளிப்படுகின்றது. அப்போது திட்டமிடப்பட்டிருந்த அந்த நுட்பம் வெளிப்பட்டு விடுகின்றது. பிறகு, இறையறிவிப்பின் நதி வேகமாக ஓட ஆரம்பிக்கின்றது. நடுவிலிருக்கும் (அந்த) தவறு அகற்றப்படுகின்றது.

அதுவொன்று இருந்தது என்றே தெரியாத அளவுக்கு (அகற்றப்படுகின்றது)..... ஆகவே நம்முடைய தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுடைய 10 இலட்சத்திற்கும் நெருக்கமான சொற்களிலும் செயல்களிலும் முழுக்க முழுக்க இறைத்தோற்றம் தென்படும்போது, ஒவ்வொரு விஷயத்திலும், அசைவிலும் அசைவின்மையிலும், கூற்றுகளிலும், நடவடிக்கைகளிலும் பரிசுத்த ஆன்மா (வாகிய ஹஸ்ரத் ஜிப்ரீல் அலை..., அவர்களி) -ன் மின்னுகின்ற ஒளிகள் தென்படும்போது ஓரிரு விஷயங்களில் மனிதத் தன்மையின் வாடை வீசுகிறதென்றால் அதனால் என்ன நஷ்டம் வந்துவிடப் போகிறது? இன்னும் கூறுவதென்றால், ஷிர்க் எனும் சோதனையில் மக்கள் மூழ்கி விடாமல் இருப்பதற்கு (அன்னார்) மனிதர் என்று நிரூபணம் ஆவதற்கு எப்பொழுதாவது இவ்வாறு நடக்க வேண்டியதும் அவசியமாகும்."

ஆகவே ஏதேனும் ஹதீஸிலோ, வரலாற்று நூல்களிலோ அல்லது வாழ்க்கை வரலாறு நூல்களிலோ பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக ஏதேனும் அறிவிப்பு வந்துள்ளது என்றால் மேலே எடுத்துரைக்கப்பட்ட திருக்குர்ஆன் வசனத்தின் ஒளியிலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் எழுத்துக்களின் ஒளியிலும் அந்த விஷயங்களை நாம் பார்க்க வேண்டும்; கண்டறிய வேண்டும். அதுவல்லாமல், ஒவ்வொரு மேற்கத்திய எழுத்தாளர்களின் விஷயத்தையும் ஒப்புக்கொண்டு (வீணாக) பழி சுமத்தக் கூடாது. பதில் பேச முடியாமல் ஆகிவிட்டோம் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. இதுவே பெருமானார் (ஸல்) அவர்களின் பரிசுத்த தன்மையை நிலைநாட்டக் கூடிய அசல் பணியாகும்; வெறுமனே முழக்கமிடுவது போதுமானதன்று!

**இரண்டு நாட்களுக்குப் பிறகு ரமலானும் ஆரம்பமாகிறது.** அதிலிருந்து முழுமையான முறையில் பயனடைவதற்கு அல்லாஹ் அனைவருக்கும் நல்வாய்ப்பு வழங்குவானாக. அதற்காக துஆவும் செய்யுங்கள்; முயற்சியும் செய்யுங்கள்.

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ரப்வாவைச் சார்ந்த சவுத்ரி முஹம்மத் இஸ்லாம் சாஹிப் மர்ஹூம் அவர்களின் மகனாகிய சவுத்ரி முஹம்மத் அன்வர் கியாஸ் (Ghias) சாஹிப் அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறி ஜனாஸா காயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَن يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)